வடகிழக்கு பருவமழை 2020
தனி கவனம்/மிக அவசரம்

# தனித்துணை ஆட்சியர்/வடிப்பக அலுவலர், ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிட்.,செம்மேடு, அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் முன்னிலை: திரு.எம்.ஏ,பெருமாள்,பி.எஸ்.சி.,

ந.க.அ1/ 34 /2020 நாள்: 14 .09.2020.

பொருள்: இயற்கை இடர்பாடுகள் - திண்டிவனம் கோட்டம் - மேல்மலையனூர் வட்டம் வடகிழக்கு பருவமழை 2020 - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மழையினால் பாதிப்பு ஏற்படும்போது மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு உடனுக்குடன் புள்ளி விவரங்கள் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டி மண்டல அளவிலான குழுக்கள் அமைத்து ஆணையிடுதல் -தொடர்பாக.

பார்வை: விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்: 05.08.2020.

------

**ஆணை:**

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் கோட்டம், மேல்மலையனூர் வட்டத்தில் வடகிழக்கு பருவமழை-2020 வருவதையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு உரிய ஆயத்தப் பணிகள் மேற்கொண்டு அதனை நிறைவேற்றிடும் பொருட்டு குறுவட்ட அளவில் அனைத்து துறையை சார்ந்த அலுவலர்களின் குழுக்கள் அமைத்து கீழ்க்கண்டவாறு உத்திரவிடப்படுகிறது.

இக்குழுக்கள் மேற்படி காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கை எடுத்த விபரம் குறித்த அறிக்கையினை உடனுக்குடன் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும், பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது:-

| வ. எண் | வட்டம் | துறை | நியமனம் செய்யப்படும் அலுவலர் | கைப்பேசிஎண் |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம் -1<br>திரு.மு.குபேந்திரன், மண்டல துணை வட்டாட்சியர்<br>Cell : 7305283949<br>மேல்மலையனூர் குறுவட்டம் | ஊரகவளர்ச்சித்துறை | 1. திரு.எஸ்.நாராயணன்<br>வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), மேல்மலையனூர்<br>2. திரு.பி.முருகன்<br>துணை வட்டாரவளர்ச்சி அலுவலர் மேல்மலையனூர் | 7402606419<br><br>7402903176 |
| | | வருவாய்த்துறை | திரு இரா.மணிகண்டன்<br>வருவாய் ஆய்வாளர்<br>மேல்மலையனூ | 9042612902 |
| | | பொதுப்பணித்துறை<br>(நீர்வள ஆதார அமைப்பு) | திரு R.கனகராஜ்.,<br>உதவி பொறியாளர், செஞ்சி | 9486456595 |
| | | கால்நடைத்துறை | திரு நிர்மலன்<br>கால்நடை உதவி மருத்துவர், மேலச்சேரி. | 9600336171 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மின்துறை | திரு.மணியரசு<br>உதவி மின் பொறியாளர் (மி.வா)<br>தாயனூர். | 9445855804 |
| | | தீயணைப்புத்துறை | திரு ஜெ.சாமளவண்ணன்<br>நிலைய அதிகாரி<br>மேல்மலையனூர் | Offi: 9445086493<br>Cell: 9791491326<br>9498252994 |
| | | நெடுஞ்சாலைத்துறை | திரு.P.பாலாஜி,<br>உ.தவி பொறியாளர், வளத்தி | 9789075034 |
| | | வேளாண்மைத்துறை | 1.திரு ஆர்.சசிக்குமார்<br>உதவி வேளாண்மை அலுவலர்<br>மேல்மலையனூர்.<br>2.திரு.ஆா.விஸ்வநாதன்,<br>உதவி வேளாண்மை அலுவலர்,<br>ஆத்திப்பட்டு | 9843686251<br><br><br>8072032219 |
| | | தோட்டக்கலைத்துறை | 1.செல்வி.K.கிருத்திகா,<br>தோட்டக்கலை உதவி இயக்குநர்(பொ),<br>மேல்மலையனூர்.<br>2.திரு.நா.பாண்டிதுரை,<br>உதவி தோட்டக்கலைத்துறை,<br>மேல்மலையனூர். | 8760969905<br><br><br>8838847308 |
| | | காவல் துறை | திருமதி.கலைச்செல்வி,<br>காவல் ஆய்வாளர்,<br>வளத்தி | 9025619735 |
| | | சுகாதாரத்துறை | 1.திரு புஷ்பநாதன்<br>வட்டார சுகாதார மேற்பார்வையாளர்<br>மேல்மலையனூர் வட்டம்<br>2.திரு.தஷ்ணாமூர்த்தி,<br>சுகாதார ஆய்யவாளர்,<br>மேல்மலையனூர். | 9655489516<br><br><br>9629883613 |
| | | தன்னார்வளர்கள் | திரு.சிவா த/பெ சுப்ரமணி<br>தாயனூர் | 9629488613 |
| | | தன்னார்வளர்கள் | திரு.சின்னதுரை த/பெ.கண்ணன்<br>ஆத்திப்பட்டு | 9442333612 |
| | | தன்னார்வளர்கள் | திரு.கோகுல் த-பெ.சுப்பிரமணி,<br>மேல்மலையனூர் | 9092255933 |
| | | தன்னார்வளர்கள் | திரு.குப்பன் த/பெ. ரங்கசாமி<br>வணக்கம்பாடி (கடலிகுருப்) | 9787367166 |
| | | தன்னார்வளர்கள் | திரு.ராஜா த/பெசங்கர்<br>ஏம்பலம் | 9092405372 |
| 2 | மண்டலம் -2<br>திரு.A.அரிதாஸ்<br>வட்ட வழங்கல்<br>அலுவலர்<br>Cell : 9790465337<br>சாத்தாம்பாடி<br>குறுவட்டம் | ஊரகவளர்ச்சித்துறை | 1.திரு.எஸ்.தேவராஜன்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்,(கி.ஊ)<br>மேல்மலையனூர்<br>2.திரு.வி.சுரேஷ்குமார்<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>மேல்மலையனூர். | 7402606420<br><br><br><br>7402903173 |
| | | வருவாய்த்துறை | திருமதி.மு.உஷாராணி<br>வருவாய் ஆய்வாளர்<br>சாத்தாம்பாடி | 8925720982 |
| | | பொதுப்பணித்துறை<br>(கட்டிடங்கள்) | திரு முருகன், பணிகள ஆய்வாளர்<br>PWD (கட்டிடம்),செஞ்சி | 9597525696 |
| | | கால்நடைத்துறை | மரு.கலைச்செல்வி,<br>கால்நடை உதவி மருத்துவர்,<br>மேல்மலையனூர் | 9750196984 |
| | | மின்துறை | திரு.க.கருணாகரன்,<br>உதவிபொறியாளர் (மி.வா)<br>தேவனூர் | 9445855794 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீயணைப்புத்துறை | திரு.த.பரஞ்ஜோதி, முன்னனி தீயணைப்பு அலுவலர் மேல்மலையனூர். | 9498252998 |
| | | நெடுஞ்சாலைத்துறை | திருமதி சு.பரமேஸ்வரி, சாலை ஆய்வாளர், வளத்தி | 9600631042 |
| | | காவல் துறை | திரு.கார்த்திக் காவல் உதவி ஆய்வாளர் வளத்தி | 9498190986 |
| | | சுகாதாரத்துறை | 1.திரு.மு.முனுசாமி சுகாதார ஆய்வாளர், வளத்தி<br>2. திரு.மு.ராஜேஷ், சுகாதார ஆய்வாளர், சாத்தாம்பாடி | 9486789528<br>9597859597 |
| | | தோட்டக்கலைத்துறை | 1.திரு.இரா.அய்யாதுரை உதவி தோட்டக்கலை அலுவலர் மேல்மலையனூர். | 7708450440 |
| | | வேளாண்மைத்துறை | 1.திரு.என்.வெங்கடேசன், உதவி வேளாண்மை அலுவலர் சாத்தாம்பாடி.<br>2. திரு S.ரகுபதி உதவி வேளாண்மை அலுவலர் வளத்தி | 9791571163<br>8610957063 |
| | | தன்னார்வளர்கள் | திரு.வேலு த-பெ. ராமக்கவுண்டர் பொற்குணம் | 9786726395 |
| | | தன்னார்வளர்கள் | திரு.பரசுராமன் த/பெ நாராயணசாமி மேல்மண்ணூர் | 9600711514 |
| | | தன்னார்வளர்கள் | திரு.ஜெயக்குமார் த/பெ நல்லதம்பி சாத்தனந்தல் | 9884033630 |
| | | தன்னார்வளர்கள் | திரு.பழனி த/பெ துலுக்கானம் அன்னமங்கலம் | 9655182334 |
| | | தன்னார்வளர்கள் | திரு.அன்பு த/பெ கண்ணன் சிறுதலைப்பூண்டி | 9092083231 |
| 3 | மண்டலம் -3 திரு ஆ.வெங்கடேசன் துணை வட்டாட்சியர் (தேர்தல்) செல்:9384043541 (அவலூர்பேட்டை குறுவட்டம்) | ஊரகவளர்ச்சித்துறை | 1.திரு.பி.நடராஜன் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மேல்மலையனூர்.<br>2.திருமதி.க.சுமதி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மேல்மலையனூர். | 7402903174<br>7402903175 |
| | | வருவாய்த்துறை | திரு.ஜே.தஸ்தகீர், வருவாய் ஆய்வாளர் அவலூர்பேட்டை | 9677342371 |
| | | பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) | திரு A அன்சர்., பணி ஆய்வாளர், வளத்தி | 9486224361 |
| | | நெடுஞ்சாலைத்துறை | திருமதி.அஸ்வினி, உதவியாளர், அவலூர்பேட்டை | 9597211558 |
| | | காவல் துறை | திரு.இளங்கோவன் காவல் உதவி ஆய்வாளர் அவலூர்பேட்டை | 9498152004 |
| | | வேளாண்மைத்துறை | 1.திரு.பி.சக்திவேல், உதவி வேளாண்மைஅலுவலர், அவலூர்பேட்டை.<br>2.திருமதி.எஸ்.சைலா, உதவி வேளாண்மைஅலுவலர், அவலூர்பேட்டை. | 9095871777<br>9952273805 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தோட்டக்கலைத்துறை | திரு C.நடராஜன்<br>உதவி தோட்டக்கலை அலுவலர்<br>அவலூர்பேட்டை | 9629037093 |
| | | சுகாதாரத்துறை | திரு.P.ஆறுமுகம்<br>சுகாதார ஆய்வாளர்,<br>அவலூர்பேட்டை. | 9994730435 |
| | | மின்துறை | திரு.G.கார்த்திகேயன்<br>உதவி பொறியாளர் (மி.வா)(பொ.),<br>அவலூர்பேட்டை | 9445855805 |
| | | கல்வித்துறை | திரு P.சிவகுமார்.,<br>BEO, மேல்மலையனூர் | 9750983170<br>7598025983 |
| | | கால்நடைத்துறை | திரு.எஸ்.ராஜன்.<br>கால்நடை உதவி மருத்துவர்,<br>மேல்மலையனூர் | 8531820917 |
| | | தீயணைப்புத்துறை | திரு ஏ.வினோத்குமார்<br>தீயணைப்பு ஓட்டுநர்<br>மேல்மலையனூர் | 9843539584<br>9498252996 |
| | | தன்னார்வளர்கள் | திரு.துரைமுருகன் த-பெ ராஜி<br>கோவில்புரையூர் | 9751086052 |
| | | தன்னார்வளர்கள் | திரு.கேசவன் த/பெ சடையாண்டி<br>சங்கிலிகுப்பம் | 9047139822 |
| | | தன்னார்வளர்கள் | திரு.சண்முகம் த/பெ கண்ணன்<br>அவலூர்பேட்டை | 9381159987 |
| | | தன்னார்வளர்கள் | திரு.வெங்கடபதி த/பெ. திருமலை<br>பெரியநொளம்பை | 8838370680 |
| | | தன்னார்வளர்கள் | திரு.வெங்கடேசன் த/பெ பரசுராமன்<br>கோட்டப்பூண்டி | 9626442504 |
| தனித்துணை ஆட்சியர்/வடிப்பக அலுவலர், ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிட்.,செம்மேடு,<br>திரு.எம்.ஏ.பெருமாள் - 9443642260<br>வருவாய் வட்டாட்சியர், மேல்மலையனூர் - திருமதி.எஸ்.நெகருன்னிசா - 9843965846 | | | | |

2020-ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த விவரங்கள்:

1. மண்டல அலுவலர்கள் தங்கள் மண்டலத்தில் உள்ள கிராமங்கள் அளவிலான தன்னார்வலர்கள் குழுவுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

2. வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து குழுக்கூட்டம் நடத்தி பயிற்சி அளித்தல் வேண்டும். பயிற்சி அளித்தமைக்கான அறிக்கையினை புகைப்படத்துடன் தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

3. கண்டறியப்பட்டுள்ள பகுதிகளுக்கு தனிக்குழு அலுவலர்கள் நேரிடையாக களஆய்வு மேற்கொண்டு தாழ்வான பகுதிகள் (Lowlying Areas), ஊரகப் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகும் ஏரிகள், மதகுகள், தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலையினை ஒட்டியுள்ள ஏரிகள், கால்வாய்கள், பாலங்கள், மேம்பாலங்கள், பழுதடைந்த மின்கம்பங்கள், சாலைகள் ஆகியவைகள் குறித்து தற்கால நிலையினை பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் (Requirements for Responsibilities for Preparedness) குறித்த கருத்துருவினை தகுந்த புகைப்படத்துடன் தனிக்குழு அலுவலர்கள் தங்களது அறிக்கையினை தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

4. நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், ஏரி உடைப்புகளை சரிசெய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களையும் பிரதிவாரந்தோறும் கீழ்க்கண்ட படிவத்திலான அறிக்கையினை சமர்ப்பித்திட வேண்டியது.

5. மண்டலத்திற்குரிய தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், ஊரக சாலைகள் ஆகியவற்றின் குறுக்கே அமைந்துள்ள ஆறுகள், குறுகியபாலங்கள், மேம்பாலங்கள் ஆகியவற்றின் பெயர்கள் மற்றும் அளவுகளுடன் விவரங்களை கண்டறிந்து வைத்திருப்பதுடன், கட்டுமானத்தன்மையினை உறுதி செய்திட தக்க நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை அனுப்ப வேண்டியது.

6. மழைக்காலங்களில் அவசர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநரைக் கொண்டு தனியார் மருத்துவமனை மருத்துவர்களுடன் கூட்டம் நடத்தி, தனியார் மருத்துவமனை குறித்த விவரங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றினை கைவசம் வைத்திருக்கும் பொருட்டு மண்டல அலுவலர்கள் சம்பந்தப்பட்ட, சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநருக்கு கடிதம் அனுப்பிட வேண்டியது. இந்நேர்வு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை சமர்ப்பித்திட வேண்டியது.

7. தங்கள் மண்டலத்திற்குட்பட்ட ஏரிகள், மதகுகள், கால்வாய்கள், குளம்.'.குட்டைகள் மற்றும் இதர நீர்நிலைகள், தாழ்வான பகுதிகள், சாலைகள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மருத்துவ மையங்கள், துணை சுகாதார மையங்கள், தனியார் மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், பொதுக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக்கூடங்கள், திருமண மண்டபங்கள், பல்நோக்கு புயல்பாதுகாப்பு மையக்கட்டிடங்கள், கடற்கரையோரப் பகுதிகளை ஆய்வு செய்தல் மற்றும் நீச்சல் வீரர்கள் ஆகியவற்றின் விவரங்களை தொடர்பு கொள்ளும் வகையில் உரிய தொலைபேசி எண்ணுடன் பெற்று அறிக்கையினை சமர்ப்பித்திட வேண்டியது.

8. தொலைபேசி எண் 1077 - ஐ பருவமழையின்போது அவசர காலத்தில் அனைத்து பொதுமக்களும், அலுவலர்களும் தொடர்பு கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டியது.

9. மழைக்காலத்திலன் போது உபயோகப்படுத்தப்படும் மணல்மூட்டைகள், சவுக்கு மற்றும் பனைமர தடுப்புக்கட்டைகள் ஆகியவற்றை எளிதில் பயன்படுத்தும் வகையில் அருகாமையில் உள்ள இடங்களை தேர்வு செய்து அதிகளவில் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டியது.

10. மண்டல அலுவலர்கள் தங்களது வட்டத்திற்குட்பட்ட கடந்த ஆண்டு அதிகளவு மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏதேனும் ஒரு இடத்தை தேர்வு செய்து, பொதுமக்கள் வடகிழக்கு பருவமழையிலிருந்து தங்களை எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்பது பற்றி அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் முன்னிலையில் செயல்முறை விளக்க நிகழ்ச்சி நடத்தி, அதற்கான அறிக்கையினை தகுந்த புகைப்படத்துடன் தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

11. அனைத்து மண்டல அலுவலர்களும் தங்களது குழு உறுப்பினர்களைக் கொண்டு பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பணி முன்னேற்ற அறிக்கையினை பிரதிவாரம் வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு சமர்பித்திட வேண்டியது.

12. தனிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு தங்கள் வட்டத்தில் மழை.'.வெள்ளத்தினால் பாதிக்கப்படகூடிய பகுதிகளின் வரைபடங்கள் (Vulnerability Maps (Place and People) for Flood Prone Areas), கிராம வரைபடங்கள், வழித்தட வரைபடங்கள் (Evacuation Routes) குண்டும் குழியுமான பகுதிகள், சுயஉதவி குழுக்கள், நாட்டு நலப்பணித்திட்டம், அரசு

சாரா நிறுவனங்கள், தேசிய மாணவர்படை ஆகியவைகள் குறித்த விவரங்கள் தொகுத்து வைத்திடவும், மழைக்காலங்களில் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் பொருட்கள் குறித்த விவரங்களையும் கைவசம் வைத்திருக்கவும் வேண்டியது.

13. வடகிழக்கு பருவமழைக்காலங்களில் அனைத்து மண்டல அலுவலர்களும் எவ்வித சுணக்கமின்றி சிறப்பு கவனம் செலுத்தி, தனிக்குழு அலுவலர்களிடமிருந்து அறிக்கையினை விரைவாக பெற்று உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிற்கும் தெரிவித்திடுமாறு மண்டல அலுவலர்களுக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

14. மழை அளவு, மழை பாதிப்பு தொடர்பான அறிக்கையினை காலம் தாழ்த்தாமல் அறிவுறுத்தப்பட்ட நேரத்திற்குள் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிற்கும் தெரிவிக்கவும், பாதிப்பு இனங்களுக்கு ஏற்ப உரிய நிவாரணங்கள் கால தாமதமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வட்ட அளவில் தலைமையிடத்து துணைவட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் பொறுப்பலுவலர்கள் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்ட அனைத்து அலுவலர்களும் தயார் நிலையில் இருந்து செயல்படவும், அவ்வப்போது நிகழும் இயற்கை இடர்பாடுகள் குறித்த பாதிப்பு விபரங்கள் சேகரித்து நடவடிக்கை எடுத்து தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

14/9/2020

தனித்துணை ஆட்சியர்/வடிப்பக அலுவலர்,
ராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிட்.,
செம்மேடு,

பெறுநர்
சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள்.
(உரிய தலைமை அலுவலர்கள் மூலமாக)
நகல்: மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வருவாய்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: திண்டிவனம் சார் ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.